**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101953

1. District : திண்டுக்கல் மாவட்டம் | PS: ஊ.த.த. பிரிவு காவல்நிலையம் | Year: 2023 ஆண்டு | FIR No.: 06 மு.த.அ. எண் | Date: 30.11.2023 நாள்

2. (i) Act சட்டம்: 7(a) Sections பிரிவுகள்: Prevention of Corruption Act 1988 as amended in 2018
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 30.10.2023, 01.11.2023, 08.11.2023, 14.11.2023, 21.11.2023, 29.11.2023, 30.11.2023.
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.11.2023 | Time : நேரம் 21.20 மணிக்கு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.11.2023 | Time : நேரம் 22.30 மணிக்கு

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் திண்டுக்கல் - மதுரை நான்குவழிச்சாலையில் சுமார் 45 கி.மீ தென்கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T. சுரேஷ் பாபு | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S.T. திருமலைசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 01.05.1966 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மருத்துவர் | (g) Address : முகவரி தலைமை இருதய அறுவை மருத்துவர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திண்டுக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

அங்கித், அமலாக்கத் துறை அலுவலகம், மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

GCP 240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
30/11/2023

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 30/11/23
DSP I VAC I DGL

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.11.2023 – 23.45 Hrs

Name: பெயர் [illegible]
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊ.த.க.பி, திண்டுக்கல்

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:6/2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

## Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 30.11.2023-ம் தேதி இரவு 21.20 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தலைமை குடிமை அறுவை மருத்துவர், T.சுரேஷ் பாபு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரை பெற்று 30.11.2023-ம் தேதி இரவு 22.30 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: T.சுரேஷ் பாபு, த/பெ S.T.திருமலைசாமி, தலைமை குடிமை அறுவை மருத்துவர், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திண்டுக்கல். பெறுநர்: உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல். அய்யா, நான் திண்டுக்கல் பழனி சாலையில் உள்ள அக்ரஹாரத்தில் எனது மனைவி திருமதி.ஸ்ரீநிவாச பிரீத்தா மற்றும் மகன்கள் திரு.பிரனவ் மற்றும் திரு.பிங்காஸ்ராஜ் ஆகியோருடன் குடியிருந்து வருகின்றேன். எனது மனைவி திண்டுக்கல்லில் ஸ்ரீ சத்திய சுபா மருத்துவமனையினை துவங்கி அதனை நிர்வகித்து வருகின்றார். நான் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தலைமை குடிமை அறுவை மருத்துவராக பணிபுரிந்து வருகின்றேன். எனது மனைவியின் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மருத்துவராக (Consultant) பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 2018ம் வருடம் திண்டுக்கல் மாவட்ட லஞ்ச ஒழிப்பு துறையில் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக என்மீதும், எனது மனைவி மீதும் வழக்கு பதிவுசெய்யப்பட்டது. அதன் பின்பு நடைபெற்ற விசாரணையில், என்மீது துறை ரீதியான நடவடிக்கைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த 29.10.2023ம் தேதி இரவு 08.04 மணிக்கு 7499927653 என்ற எண்ணிலிருந்து என்னுடைய அலைபேசி எண். 9842133302க்கு Whatsapp Call வந்தது. அப்போது பேசிய நபர் தனக்கு தமிழ் தெரியாது எனக்கூறிவிட்டு ஆங்கிலத்தில் பேசினார், தான் Enforcement Directorate (E.D.) ல் வேலை செய்வதாகவும், நாளை 30.10.2023 திங்கள்கிழமை காலை 9 மணிக்கு மதுரை E.D. அலுவலகத்திற்கு விசாரணைக்கு வருமாறு கூறினார். நான் என்ன விசாரணை என்று கேட்டேன். அதற்கு அவர்,

வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்தது தொடர்பான விசாரணைக்கு வருமாறு கூறினார். அதற்கு நான் என்னிடம் எந்தவொரு ஆவணமும் இல்லை எனக் கூறியதற்கு, தன்னிடம் ஆவணங்கள் உள்ளதாகவும், விசாரணைக்கு ஆஜராகுமாறும் கூறினார். அதற்கு நான் நாளை எனக்கு வேறு அலுவல் இருப்பதால் விசாரணைக்கு புதன்கிழமை வரலாமா எனக் கேட்டேன். அதற்கு அவர் நாளை நீங்கள் வரவில்லை என்றால், உங்களுக்கு சம்மன் அனுப்பி, அந்த தகவல் பத்திரிகை செய்தியாக வெளிவந்துவிடும் பரவாயில்லையா என்றார். அப்போது நான் நாளை விசாரணைக்கு ஆஜராகிறேன் எனச் சொல்லிவிட்டேன். அந்த Whatsapp Callல் Hardik என்ற பெயர் வந்தது. நானும் 30.10.2023 திங்கள்கிழமை காலை சுமார் 8.45 மணியளவில் மதுரை தபால் தந்தி நகரில் உள்ள ED அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு இருந்த பாதுகாவலர் என்னை அலுவலகத்திலிருந்த பார்வையாளர் பதிவேட்டில் பதிவு செய்ய சொன்னார். நானும் எனது பெயர், செல்போன் எண் மற்றும் திண்டுக்கல் என பதிவு செய்தேன். அப்போது அலுவலகத்திற்கு அலுவலர்கள் யாரும் வராததால், அந்த பாதுகாவலர் வரவேற்பு அறையில் என்னை அமரச் செய்தார். சுமார் 10 நிமிடம் கழித்து எனது அலைபேசி எண்ணிற்கு அந்த நபர் Whatsapp Call செய்து, அலுவலகத்தினை விட்டு வெளியே வந்து காத்திருக்குமாறு கூறினார். நானும் வெளியே வந்து எனது காரினுள் அமர்ந்திருந்தேன். அதன்பின்பு 09.21 மணிக்கு மீண்டும் எனது அலைபேசியில் Whatsapp Call செய்து எங்கே இருக்கிறீர்கள் எனக் கேட்டார். நான் எனது காருக்குள் இருப்பதாக தெரிவித்ததால் எனது கார் எங்கே இருக்கிறது என்று கேட்டு வந்து ஏறிக்கொண்டார். சுமார் 5 நிமிடம் என்னிடம் பேசிய பிறகு, காரினை ஓட்டிச் செல்லுமாறு கூறினார். நாங்கள் சுமார் 1 லு மணி நேரம் காரிலேயே அந்த பகுதியில் சுற்றிவந்தோம். அப்போது Hardik என்ற அந்த நபர் என்மீது திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள சொத்துக்குவிப்பு வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், இது சம்மந்தமாக PMO அலவலகத்திலிருந்து நடவடிக்கை எடுக்க சொல்லி புகார் வந்துள்ளதாகவும், உங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க வேண்டும் என்றால் தங்களுக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். அதற்கு நான் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் எனக் கேட்டேன். அதற்கு Hardik என்ற அந்த நபர் ரூபாய் 3 கோடி வேண்டும் எனவும், அதுவும் தனக்கு இல்லை, தனது மேல் அதிகாரிக்கு தான் என்றும், நான் சட்டத்திற்கு

புறம்பாக இரவு நேரங்களில் அறுவை சிகிச்சைக்கு செல்வதாகவும், மற்ற மருத்துவமனைகளுக்கும் அறுவை சிகிச்சைகளுக்கு சென்று பணம் சம்பாதிப்பதாகவும் தெரிவித்தார். அதற்கு நான் தமிழ்நாடு மருத்துவ நடத்தை விதிகளின் படிதான் மற்ற மருத்துவ மனைகளுக்கு Consultant ஆக சிகிச்சை அளிப்பதற்கு செல்வதாக தெரிவித்தேன். அப்போது Hardik என்ற அந்த நபர் அவருடைய மேல் அதிகாரிக்கு நான் கூறிய தகவலை அலைபேசியில் ஹிந்தி மற்றும் ஆங்கிலத்திலும் தெரிவித்தார். அதன் பின்பு அந்த நபர் தனது உயர் அதிகாரியிடம் கூறிவிட்டதாகவும், ரூபாய் 51 லட்சம் மட்டும் கொடுத்தால் போதும் எனவும், அதனை புதன்கிழமை (01.11.2023) அன்று தயாராக வைத்திருக்குமாறும், அவர் சொல்லும் இடத்தில் வந்து கொடுக்கவேண்டும் என்று கூறினார். நான் வேறுவழியின்றி பணத்தினை தயார் செய்வதாக கூறிவிட்டு, அந்த நபரை ED அலுவலகத்திற்கு அருகில் எனது காரிலிருந்து இறக்கிவிட்டு திண்டுக்கல்லுக்கு வந்துவிட்டேன். அதன் பின்பு 31.10.2023ம் தேதி இரவு 9.10 மணியளவில் எனக்கு அந்த நபர் Whatsapp Call ல் தொடர்புகொண்டு நான் கேட்ட பணத்தினை தயார் செய்து விட்டீர்களா எனக் கேட்டார். நான் பணம் தயாராக உள்ளது எனக் கூறினேன். அதற்கு அவர் என்னை அடுத்தநாள் அலைபேசியில் தொடர்புகொள்வதாக சொல்லிவிட்டார். மறுநாள் 01.11.2023ம் தேதி காலை 7.10 மணிக்கு Whatsapp Call ல் தொடர்பு கொண்டு கிளம்பிவிட்டீர்களா எனக் கேட்டார். நானும் டிரைவர் வந்தவுடன் கிளம்புவதாக கூறினேன். அதன்பின்பு 7.17 மணிக்கு மீண்டும் தொடர்பு கொண்டு நத்தம் வழியாக மதுரைக்கு வருமாறும், வழியில் பணத்தினை பெற்றுக்கொள்வதாகவும் கூறினார். நானும் நத்தம் தாண்டி நத்தம் to மதுரை நான்கு வழிச்சாலையில் சென்றுகொண்டிருந்தபோது 7.46 மணிக்கு என்னை whatapp call ல் தொடர்பு கொண்ட அந்த நபர் எனது காரினை பார்த்துவிட்டதாகவும், காரினை நிறுத்துமாறும் கூறினார். நானும் எனது காரினை இடது பக்கமாக நிறுத்தினேன். அப்போது அந்த நபர் அவரது காரை (பதிவு எண்ணை கவனிக்கவில்லை) எனது காரின் முன்பக்கம் நிறுத்திவிட்டு, காரின் ஓட்டுநர் இருக்கையிலிருந்து இறங்கி எனது காருக்கு அருகில் வந்தார். நானும் அவரும் காருக்கு வெளியில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது என்னிடம் நான் கேட்ட லஞ்சப்பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா எனக் கேட்டார். நான் ரூபாய். 20 லட்சம் கொண்டு வந்திருப்பதாக கூறினேன். அதற்கு

அவர் தனது மேல் அதிகாரிகள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் எனவும், என் மீதான புகாரினை அவர் முடித்து மேல் அதிகாரிகளுக்கு கடந்த 31.10.2023ம் தேதியே அனுப்பிவிட்டதாகவும், அங்குதான் நிலுவையில் உள்ளது எனவும் தெரிவித்தார். மீதிப்பணத்தினை எப்போது கொடுப்பீர்கள் எனக் கேட்டார். நான் அடுத்த வாரம் தயார் செய்த தருவதாக தெரிவித்தேன். அதன் பின்பு தற்போது என்னிடம் உள்ள பணத்தினை கொடுக்குமாறு கூறினார். நான் எனது காரின் ஓட்டுநர் திரு.அரவிந்த் அவர்களிடம் எனது காரில் இருந்த பணம் வைத்திருந்த பையினை எடுத்து வரச் சொன்னேன். அவரும் காரிலிருந்து எடுத்து வந்தார். அப்போது அந்த நபர் அவருடைய காரின் டிக்கியினை திறந்து அதில் பணப் பையினை வைக்கச் சொன்னார். எனது ஓட்டுநரும் அங்கு வைத்துவிட்டு வந்துவிட்டார். இந்த நிகழ்வுகள் அனைத்தும் எனது வாகனத்தில் முன்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கேமராவில் பதிவாகியுள்ளது. மீதிப்பணத்தினை ஒருவாரத்திற்குள் தருமாறு கூறினார். மேலும் பணம் தன்னிடம் கொடுத்தது தொடர்பாக யாரிடமாவது தெரிவித்தால், உங்கள் மீதும், உங்கள் மனைவி மீதும் ED கடுமையான நடவடிக்கை எடுக்கும் எனவும் மிரட்டினார். மீண்டும் 01.11.2023ம் தேதி காலை 8.54 மணிக்கு என்னை Whatsapp Call-ல் தொடர்பு கொண்டு முழு பணத்தினையும் வாங்காமல், ஏன் இந்த பணத்தினை வாங்கினீர்கள் என்று அவருடைய மேல் அதிகாரிகள் அவரை திட்டியதாகவும், மீதிப் பணம் ரூபாய் 31 லட்சத்தினை கண்டிப்பாக அடுத்த புதன்கிழமை 08.11.2023ம் தேதி கொடுக்க வேண்டும் எனக் கறாராக கூறிவிட்டார். மீண்டும் 03.11.2023 மற்றும் 06.11.2023 ஆகிய தேதிகளில் என்னை Whatsapp Call-ல் தொடர்பு கொண்டு பணத்தினை தயார் செய்து விட்டீர்களா எனக் கேட்டார். நான் தற்போது பணத்தினை தயார் செய்ய இயலவில்லை எனக் கூறினேன். மீண்டும் 08.11.2023ம் தேதி காலை 9.30 மணிக்கு என்னை Whatsapp Call-ல் தொடர்பு கொண்டு பணம் தயார் செய்துவிட்டீர்களா என மீண்டும் கேட்டார். அதற்கு நான் என்னுடைய மருத்துவமனை பணியாளர்களுக்கு தீபாவளி பண்டிகைக்காக போனஸ் கொடுக்க வேண்டியுள்ளது மற்றும் சில செலவுகள் உள்ளது, அதனால் பணத்தினை தயார் செய்ய இயலாது எனத் தெரிவித்தேன். அன்றைய தினம் இரவு 7.03 மணியளவில் என்னை Whatsapp Call-ல் தொடர்பு கொண்டு பணத்தினை கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என்பதால்தான் என்னை தொடர்பு கொள்வதாகவும் தெரிவித்தார். நானும் வேறு வழியின்றி பணம் ரூபாய் 20

லட்சம்தான் தயார் செய்ய முடியும், மீதிப் பணத்தினை பிறகு தயார் செய்து தருவதாகவும் கூறினேன். அந்த ரூபாய் 20 லட்சத்தையும் தீபாவளி கழித்து எப்படியாவது தயார் செய்து கொடுப்பதாக கூறினேன். அதற்கு அவர் கண்டிப்பாக 15.11.2023 புதன்கிழமை தான் சொல்லும் இடத்தில் தான் கேட்ட பணத்தினை கொடுக்க வேண்டும் எனவும், பணத்தை தயார் செய்துவிட்டு 14.11.2023ம் தேதி செவ்வாய்கிழமை தன்னை தொடர்பு கொள்ள வேண்டும் எனக் கூறினார். நான் அவர் கேட்ட லஞ்சப்பணத்தில் ரூ.20,00,000/-த்தை மட்டும் தயார் செய்துவிட்டு கடந்த 14.11.2023ம் தேதி இரவு 9.45 மணிக்கு அவரது whatsappல் நாளை விடுமுறை எடுத்து அங்கு வரவா என்றும், தாங்கள் சொன்னது தயாராகிவிட்டது என்றும், தங்களிடம் பேசவா என்றும் குறுஞ்செய்தி அனுப்பினேன். அதற்கு எந்த பதிலும் அவரிடமிருந்து வரவில்லையென்பதால், மீண்டும் இரவு 9.57 மணிக்கு whatsapp call-ல் தொடர்பு கொண்டேன். அவர் எனது போனை எடுக்கவில்லை. பின்பு அன்றைய இரவு 12.38 மணிக்கு தனக்கு காய்ச்சலாக இருப்பதாகவும், பின்பு தன்னை அழைப்பதாகவும், அவர் வெளியூர் சென்றுவிட்டதாகவும், அதனை என்னிடமே வைத்திருங்கள் என்றும், விரைவில் அவருக்கு சரியான பின் பெற்றுக்கொள்வதாகவும் whatsapp-ல் குறுஞ்செய்தி அனுப்பினார். பின்பு 21.11.2023ம் தேதி காலை 8.50 மணிக்கும், 10.42 மணிக்கும் எனது whatsapp callல் அவர் அழைத்துள்ளார். சற்று வேலையாக இருந்ததால் நான் அதை கவனிக்கவில்லை. பின்பு 21.11.2023ம் தேதி 10.44 மணிக்கு அவரது whatsapp எண்ணிற்கு whatsapp call செய்தபோது அவருக்கு காய்ச்சல் சரியாகி விட்டதாகவும், அவர் வேறு முக்கிய பணியாக சென்னைக்கும், டெல்லிக்கும் சென்று வந்ததாகவும், அதனை என்னிடமே பத்திரமாக வைத்திருக்குமாறு கூறினார், சீக்கிரமாக வந்து பெற்றுக்கொள்வதாகவும் கூறினார். நான் நீங்கள் மாறுதலில் சென்றுவிட்டீர்களா எனக் கேட்டதற்கு, இல்லை இல்லை நான் மாறவில்லை என்றும், காவிரி ஆற்றில் மணல் குவாரி தொடர்பான பணியில் இருப்பதாகவும் கூறினார். நான் ஏதாவது குறைக்க முடியுமா என்று கேட்டதற்கு, அதற்கு வாய்ப்பே இல்லை என்று சொல்லிவிட்டார். நான் அந்த பணத்தினை என்னால் நீண்டநாள் கையில் வைத்திருக்க முடியாது என கூறியதற்கு, ஏன் வைத்திருக்க முடியாதா எனக் கேட்டார். உங்களுக்கு ஹவாலா பணம் பரிமாற்றம் செய்பவர்கள் யாரும் தெரியாதா எனக் கேட்டார். எனக்கு அவர்களைப் பற்றியெல்லாம் தெரியாது

எனக் கூறிவிட்டேன். எனக்கு ஒரு நாளைக்கு முன்பு தாங்கள் வரும் தகவலைக் கூறினால் நான் எனது மகனின் வைப்புத் தொகையிலிருந்து மதியம் 3 மணிக்குள் வங்கியிலிருந்து எடுத்து தயார் செய்து விடுவேன் எனக் கூறினேன். அதற்கு அவர் திண்டுக்கல் வழியாக வரும்போது பெற்றுக்கொள்வதாகவும், நீங்கள் அதனை தயார் நிலையில் வைத்திருங்கள் என்று கூறினார். இது சம்மந்தமாக நீங்கள் யாரிடமும் தெரிவிக்ககூடாது எனவும், அப்படி ஏதாவது செய்தால் உங்கள் மீது எதிர்மறையான விளைவுகள் ஏற்படும் என்றும் கூறினார். நான் யாரிடமும் தெரிவிக்கமாட்டேன் எனச் சொல்லிவிட்டேன். நான் உங்களிடம் என்று என சொன்ன பிறகு தங்களால் 24 மணி நேரத்திற்குள் தயார் செய்துவிட்டு மறுநாள் காலை கொடுக்க முடியுமா எனக் கேட்டார். நான் கண்டிப்பாக முடியும் என்று கூறினேன். பின்பு மீண்டும் என்னை யாரிடமும் இந்த தகவலை சொல்லக்கூடாது என்றும், உங்களுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு சில இடங்களில் நடந்த ரெய்டு பற்றி தெரியும், அதனால் கவனமாக இருங்கள் என எச்சரித்தார். தெரியும் சார், நான் அவ்வாறு செய்யமாட்டேன் எனக் கூறிவிட்டேன். பின்பு உங்களை தொடர்பு கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார். நேற்று 29.11.2023ம் தேதி காலை 8.31 மணிக்கு Hardik என்னை whatscallல் தொடர்பு கொண்டார். நான் மருத்துவமனையில் OPல் இருந்ததால் டவர் சரியாக கிடைக்கவில்லை, எனவே வெளியே வந்து மீண்டும் அவரை 8.33 மணிக்கு whatsapp callல் தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது அவர் தயாராகிவிட்டதா, நாளை காலை கொடுக்க முடியுமா எனக் கேட்டார். நான் நாளைதான் தயார் செய்ய முடியும், நாளை மறுநாள் காலை கொடுத்து விடுவதாக கூறினேன். அதற்கு அவர் சரி என்றும், அந்த பகுதியில் அவருக்கு ஒரு வேலை இருப்பதாகவும், அந்த வழியே வரும்போது பெற்றுக்கொள்வதாகவும், தயாராக வைத்திருங்கள் எனக் கூறினார். இந்த விசயத்தை உங்களுக்குள்ளேயே வைத்திருங்கள், இதனோட முக்கியத்துவம் உங்களுக்கு தெரியும், கவனமாக இருங்கள், உங்கள் நல்லதுக்குத்தான் கூறுகிறேன் என்றார். நான் சரி என்று கூறிவிட்டேன். அவர் சொல்லும்போது சொல்லுமிடத்தில் இன்று 30.11.2023ம் தேதியோ அல்லது நாளை 01.12.2023ம் தேதி காலையிலேயோ வாங்கிக்கொள்வதாக கூறினார். நான் Hardik அவர்களுடன் மேலே சொல்லப்பட்ட அனைத்து நிகழ்வுகளிலும் ஆங்கிலத்திலேயேதான் உரையாடினேன். இன்று 30.11.2023ம் தேதி இரவு 7.47 மணிக்கு whatsappல் தயாரா? எனக் குறுஞ்செய்தி

அனுப்பினார். நான் ஆம் என்று பதில் அனுப்பினேன். அதற்கு அவர் பிற தகவல்களை கேட்டுவிட்டு, நாளை 01.12.2023ம் தேதி காலை 6 மணிக்கு வரமுடியுமா எனக் கேட்டார். நான் எனது ஓட்டுனர் 7.30 மணிக்குத்தான் பணிக்கு வருவார். அதனால் 7.30 மணிக்கு கிளம்பி வருவதாக தகவல் அனுப்பினேன். அதற்கு அவர் சரி என்றும், நாளை பார்ப்போம் என்றும் குறுஞ்செய்தி அனுப்பினார். நானும் சரி என தெரிவித்து குறுஞ்செய்தி அனுப்பினேன். மேற்கண்ட அனைத்து உரையாடல்களும் எங்களுக்குள் ஆங்கிலத்திலேயே நடைபெற்றது. என்னை மிரட்டி, நிர்ப்பந்தம் செய்து பணம் ரூபாய் 20 லட்சத்தினை ஏற்கனவே 01.11.2023ம் தேதி பெற்றுக் கொண்டும், மேலும் ரூபாய் 31 லட்சத்தினை தரவில்லை என்றால் என்மீதும், என் மனைவி மீதும் வழக்கு பதிவு செய்து எனது மருத்துவ சேவையினை களங்கப்படுத்தி விடுவதாக தெரிவித்ததால், எனக்கு ஏற்பட்ட மன உளைச்சலாலும், உடல்நிலை சரியில்லாமல் போனதாலும், மீண்டும், மீண்டும் விடாமல் தொடர்பு கொண்டு என்னை அச்சுறுத்துவதாலும், என்ன செய்வது என்று தெரியாமல் இருந்ததாலும் உடனடியாக புகார் அளிக்க இயலவில்லை. தற்போது எனக்கு லஞ்சப்பணம் கொடுக்க விருப்பம் இல்லாத காரணத்தினால் தங்களிடம் இந்த புகார் அளிக்க வந்துள்ளேன். மேலும் Hardik என்ற அந்த நபர் கேட்ட மீதி லஞ்சப்பணம் ரூபாய் 31 லட்சத்தில், ரூபாய் 20 லட்சம் மட்டும்தான் தயார் செய்து கொண்டு வந்துள்ளேன். எனவே எனது இந்த புகாரின் அடிப்படையில் என்னிடம் லஞ்சம் கேட்ட EDயில் பணிபுரிந்து வரும் ஹர்த்திக் என்பவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (தி.சுரேஷ்பாபு, 30.11.2023)

Sir, Received the complaint on 30.11.2023 at 21.20 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.06/2023 u/s 7(a) of P.C Act 1988, as amended by the PC (amendment) Act 2018, on 30.11.2023 at 22.30 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Nagarajan, Deputy Superintendent of Police, V&AC, Dindigul 30.11.2023)

Original FIR along with the complaint of Tr.T.Sureshbabu, S/o.S.T.Thirumalaisamy, Chief Civil Surgeon, Government Medical College Hospital, Dindigul are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

30/11/23

(J.Nagarajan)
Dy.Supdt. of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.